# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2258/15 - 2021 දෙසැම්බර් මස 14 වැනි අඟහරුවාදා - 2021.12.14

*2258/15 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 2/1976* (iv).

**1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டம்**

*1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டதும் பெருந்தோட்ட அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்.*

**ஜயம்பதி மொல்லிகொட,**
தவிசாளர்,
இலங்கைத் தேயிலைச் சபை.

கொழும்பு,
*2021, செத்தெம்பர் 13.*

ஒழுங்குவிதி

*2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 1677/14 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை (தேயிலை ஊக்குவிப்புக்கும் சந்தைப்படுத்துதல் மூலோபாயத்துக்குமான அறவீட்டைச் சேகரித்தல்) ஒழுங்குவிதிகள் அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து பயனுறும் வகையில் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.*

EOG *12-0136/1*

*ச. வ. பி. 2/1976* (iv).

## *1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டம்*

## *13(1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலை சபைச் சட்டத்தின் 13(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண ஆகிய நான், அச்சட்டத்தின் 13(1) (அ) என்னும் பிரிவின்கீழ் 2006, ஏப்பிறல் 17 ஆந் திகதியிடப்பட்ட 1441/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் விதிக்கப்பட்ட தீர்வையை "ஒவ்வொரு நூறு கிலோ கிராம்களுக்கும் நாநூறு ரூபா" என்றிருப்பதனை "ஒவ்வொரு நூறு கிலோ கிராம்களுக்கும் முந்நூறு ரூபா" என இக்கட்டளை மூலம் வேறுபடுத்துகின்றேன்.*

**ரமேஷ் பத்திரண**,
*பெருந்தோட்ட அமைச்சர்.*

கொழும்பு,
*2021, நவெம்பர் 25.*

EOG *12-0136/2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*